[1993 ஏப்ரல் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 353, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

353—

ராதாபுரம் மக்களுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*14656—திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, நாங்குநேரி ராதாபுரம் மக்களுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் அமைப்பதற்காக, தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ராதாபுரம், அதனைச் சுற்றியுள்ள நாங்குநேரி, சாத்தான்குளம் போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை மிக உச்சகட்டத்தை அடைந்து, 500 அடிக்கு மேலேயுள்ள 'போர்ஸ்' எல்லாம் 'ஃபெயிலியூர்' என்ற நிலை பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர், சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர், ட்வாட் போர்டால் அறிவிக்கப்பட்ட நிலையிலும், 1989 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்திலே இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அன்றைய அமைச்சரால் வாக்குறுதி அளிக்கப்பட்டு ஆய்வுகள் எல்லாம் முடிக்கப்பட்டு, மதிப்பீடு எல்லாம் போடப்பட்டு, இன்றைக்கு டெக்னிகல் சேங்ஷனுக்காக வந்துள்ளது. ஆகவே, நீங்கள் நிதியை ஒதுக்க முன் வருவீர்களேயானால், உடனே அந்தப் பணி துவக்கப்படக்கூடிய நிலையிலே இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்திலே கொண்டு உடனடியாக அதைத் துவங்குவதற்கு நிதி ஆதாரத்தைத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிவுற்று, திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு செயலாக்குவதற்கு எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 15]

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகாரிகளை எல்லாம் நான் கேட்கின்ற போது, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று 1989-லிருந்து, கூறுகிறார்கள். இன்றைக்கு 1993 நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே நிலவுகின்ற கொடிய குடிநீர்ப் பஞ்சத்தைக் கருத்திலே கொண்டு அந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டது. ஆகவே, எந்த அளவிற்கு துரிதமாக செயல் படுத்தி நாம் முடித்துக் கொடுக்கிறோமோ அந்த அளவிற்கு அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்கின்ற காரணத்தினாலே— உலக வங்கி நிதியிலே அது செயல்படுத்தப்படுவதாக இருக்கின்றது—அமைச்சர் அதற்கு உடனே அனுமதி வழங்கி, அந்த நிதி ஆதாரத்தைத் தந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருவாரா என்று மீண்டும் அமைச்சரைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. நடேசன் பால்ராஜ்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டம் நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தொகுதிகளுக்கு வர இருக்கின்றது. இப்போது சாத்தான்குளம் தொகுதியிலும், ராதாபுரம் தொகுதியிலும், நாங்குநேரி தொகுதியிலும் குடத்திற்கு 50 பைசா, 75 பைசா என்கின்ற நிலையில் விலை கொடுத்து தண்ணீர் வாங்குகின்ற நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயலாற்ற நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கெடுக்க விரும்புகிறீர்களா........ (சிரிப்பு) கேட்க விரும்புகிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலிக்கப்படும் என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 354. திரு. டி. சுதர்சனம், திரு. இரா. அப்பு நடேசன் இருவரும் இருக்கையில் இல்லை. திரு. கே. பி. ராஜூ கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

354—

உணவுப்பொருட்கள் பங்கீட்டுக் கடைகள் மூலம் வழங்கப்படும் அரிசி.

*9914—திரு. டி. சுதர்சனம் :

திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவுத்துறை பங்கீட்டுக் கடைகளில் உணவு அட்டை ஒன் றிற்கு 20 கிலோ அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு மற்றும் கூட் டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது பிரதி மாதம் வயது வந்தவர்களுக்கு 4 கிலோ, குழந்தைகளுக்கு தலா 2 கிலோ என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 12 கிலோவுக்கு மிகாமல் அரிசி வழங்கப்படுகிறது. இன்னும் அதிகப்படியாக அரிசி வழங்கு வது என்பது அரிசியின் கையிருப்பு மற்றும் நிதி நிலைமையைப் பொறுத்து அமையும். தற்சமயம் அதிகப்படியாக அரிசி வழங்கக் கூடிய நிலை இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ரேஷன் கார்டு இல்லாதவர்கள் வீடுகளே இல்லை. வசதி படைத்தவர்கள் எல்லோரும் ரேஷன் கார்டுகள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பாஸ் போர்ட் எடுக்க வேண்டுமென்றாலும், நீதிமன்றங்களில் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றாலும், லைசென்ஸ் எடுக்க வேண்டு மென்றாலும், எல்லோருமே இப்போது ரேஷன் கார்டு வேண்டு மென்று கேட்கிறார்கள். ஆகவே, அத்தனை பேரும் இப்போது ரேஷன் கார்டு—வசதி இருப்பவர்கள், வசதி இல்லாதவர்கள் ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் இருக் கிறார்கள். வசதி இல்லாதவர்கள் ரேஷன் கார்டிலே அரிசி வாங்கு கிறார்கள். ஆனால் வசதியுள்ளவர்கள் அரிசி வாங்குவது கிடை யாது. அவர்களுடைய அரிசியைக் குறைத்து .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே. பி. ராஜு : அந்தக் கேள்விக்குத் தான் வருகிறேன். வசதி உள்ளவர்கள் அரிசி வாங்காமல் இருக்கிற காரணத்தால் அவர்களுடைய அரிசியை மட்டும் குறைத்து, 12 கிலோவுக்கு மேல் அதிகமாக ஏழைகளுக்கு வழங்கப்படுமா ? அப்படி அது சரியில்லை என்றாலும் கூட, மற்ற தானியங்களையாவது, அதாவது கோதுமை அல்லது மற்ற தானியங்களையாவது—